# வீரமாமுனிவர் அருளிய தேம்பாவணி பேசும் தூய வளனாரும் அருள் வரங்களும் சூசையப்பருக்கு தோத்திரப் பாடல்

*ஜோ. ரீட்டா மேரி*
உதவி பேராசிரியர்
M.A.,M.A (HR). ,M.ED.,M.PHIL.,PGDGC.,NET.,
தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
மஞ்சக்குப்பம், கடலூர், தமிழ்நாடு. இந்தியா

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6414

**விருத்தம்**

**"ஆதியுமாய் அந்தமுமாய் ஒன்றாய் மூன்றாய்**
**அண்ட பிண்ட புரணமாய் நிறைந்த ஞானச்**
**சோதியுமாய்த் தெய்வீகமாய்ப் பரமாய்த் தானாய்ச்**
**சுயமூல காரணமாய் இறுதிகால**
**நீதியுமாய் நிர்மலமாய் அருவாய் எங்கும்**
**நின்றபிரான் திரு உபய சரணுக்கு ஆளாய்**
**வேதவடிவாக வந்த சூசை மீதில்**
**வியஞ் சொல்வேன் ஆடகத்தோடு அயஞ்சொல்வேனே!"**

-தேம்பாவணிக் கீர்த்தனை-(1)

**முன்னுரை**

"நீதிமான்"- எனும் ஒற்றைச் சொல்லுக்கு உரிமையாளர். இறைத் திருவுளத்திற்கு எப்போதும் பணிந்து நடப்பவர். கனவுகளில் எச்சரிக்கப்பட்டு காயப்பட்டாலும் கருத்தொருமித்தக் காதல் வாழ்வில் கலக்கமடையாதவர். "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுமாம்" - இதில் யார் பூ? யார் நார்? என்ற விவாதத்திற்கு இடமின்றி பூவையும் நாரையும் தொடுத்தவரையே கரத்தில் ஏந்திய பெருமகனார்.

**"ஆன்மாவை அறிந்தவன் ஆண்டவனை அறிவான்"-ஆம்!**
**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்."** **(திருக்குறள்: 517)**

"Assured this man will do this task this way: Leave it to him" எனும் குறள் பொருண்மைக்குப் பொருத்தமானவர் புனித வளனார்.

தான் படைத்த உலகில் மனிதர் உதவி தேவைப்பட்டது கடவுளுக்கு. மரியாள் எனும் கனியை கன்னியை தூய ஆவியின் அருள் துணையோடு தாயாக ஏற்கத் திருவுளம் கொண்டார் கடவுள்! தந்தையின்றி தாய்க்கும் தாய்மைக்கும் மதிப்பில்லையே என்றெண்ணி கன்னித்தாயை மாசுமருவற்ற செம்மறியை சுமக்கும் பேறுபெற்ற மரியாளுக்கு ஏற்ற, ஒத்தத் துணையை ஒப்புயர்வற்ற துணையைத் தேர்ந்து கொடுக்கவும் சித்தமானார். அதன்படி,

அன்புத் துணைவராக காக்கும் கணவராக, மூவொரு இறைவனில் இரண்டாம் ஆளாகிய சுதனாம் இயேசுவை வளர்க்கும் தந்தையாக, கடவுளால் தேர்ந்து கொள்ளப்பெற்ற ஓர் அதிசயப் பிறவியே நம் காவலர் புனித சூசை தந்தை. இவர், சற்றும் சுயநலமில்லாதவர்: சிற்றின்ப நாட்டமில்லாதவர்: சிந்தைக்கு இனியவர்: பெருமை பேசாத மௌன சித்தர்: தாவீதின் குலத்தில் தோன்றிய தங்கத் தாமரை: பெத்லகேமில் பிறந்து நாசரேத்தில் வாழ்ந்தவர்: தச்சு வேலை செய்தவர்: எளியவர்: இறைவனோடு இரண்டறக் கலந்து இதயத்தோடு பேசி மகிழ்ந்தவர்: மறைவித்தகர்: விசுவாச ஊற்றுமிவர்: விவேகம் ஒன்றே இவரின் வீரம்: இறைமகன் இயேசுவை மார்மேலும் தோள்மேலும் சுமக்கும் பேறுபெற்றவர்: தெய்வீக பேராசிரியருக்கே கற்றுத்தந்த கலை வித்தகர்: இத்தனைப் பண்பும் மொத்தமாய்ப் பெற்ற உத்தம நீதிமானின் அழகு நிச்சயம் பேரழகே!

**"சூசை யெனினும் யோசேப்பு யெனினும்**
**வளன் எனினும் வளனார் எனினும்**
**நீதிமான் எனினும் நேர்மையாளர் எனினும்**
**மாமுனி எனினும் மாவளன் எனினும்**
**அனைத்தும் ஒன்றே! அவருள் நன்றே!"**

"சூசையப்பரின் தோற்றத்தைக் கண்டால், தூயவர் என்றே சொல்லி வணங்கினார்" - (இயேசு காவியம்) ஆம்! தூயவரான நம் காவலர் சூசை தந்தை, குருக்களுக்கும் துறந்தவர்க்கும் ஏழைகளுக்கும் இளையோர்க்கும் இல்லறத்தார்க்கும் வருந்துவோர்க்கும் உழைப்போர்க்கும் துஞ்சினோர்க்கும் என எல்லா நிலையினருக்கும் காவல் அரணாகத் திகழ்ந்தவர்: திகழ்கின்றவர்!

தாய்த்திரு அவையின் தலைமைப் புனிதராக விளங்கும் புனித சூசையப்பரை, "அகில உலகத் திருச்சபையின் பாதுகாவலர்" என்று அறிவிக்குமாறு 1870-ம் ஆண்டு ஒன்றிணைந்த ஆயர் பேரவை திருத்தந்தை 9-ம் பத்திநாதரிடம் விண்ணப்பித்தனர். அவ்விண்ணப்ப வேண்டுகோளுக்கு இணங்க 1870-ம் ஆண்டு உலகத் திருச்சபையின் பாதுகாவலர் புனித சூசையப்பர்" - என்று அறிவிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன் அடிப்படையில் 150 ஆண்டுகளை நினைவு கூர்ந்து சிறப்பிக்கும் விதமாக இன்றையத் திரு அவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 8 டிசம்பர் 2020 முதல் 8 டிசம்பர் 2021 வரையிலான ஓராண்டு காலத்தை புனித யோசேப்பு ஆண்டாக அறிவித்திருந்தார். (டிசம்பர் 8 என்பது தூய கன்னிமரியின் அமல உற்பவத்தை அறிக்கையிடும் நாள் என்பதையும் நாம் நம் கருத்தில் கொள்வது சிறப்பு)

இயேசு கிறிஸ்துவை வளர்த்தவர், தாய்த்திரு அவையைக் காத்து வளர்ப்பவர் புனித சூசையப்பர் என்ற நிலையில். இறைப்பிரசன்னம் நிரம்பிய அவரின் தூய வாழ்வு இன்றும் என்றும் தொடரப்பட வேண்டும் என்பதற்காகவும் ஆபத்துக் காலத்தில் அவரை அண்டி மன்றாட ஆபத்து அத்தனையும் அகன்று போனதை உணர்ந்து உணர்த்திடவும்., கோவிட்-19 எனும் பெருந்தொற்றுக் காலக்கட்டத்தை புனித வளனாரிடம் ஒப்படைத்திருந்தார் போலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

மறைபோற்றும்திருஅவை போற்றும்தூய வளனார் குறித்து அறிவது அவசியமானது. தமிழ்கூறு நல்லுலகும் வளனார் குறித்து சான்று பகர்ந்துள்ளது.தூய வளனாரின் ச ான்றாண்மைக்குத் தக்கச் சான்றளிப்பது இயேசு சபை துறவி வீரமாமுனிவரின் தேம்பாவணிக் காப்பியமாகும்.

"தேம்பாவணி" - வாடாத மாலை" எனப் பொருள்படும் ஓர் ஒப்பற்றக் காப்பியமாகும். தூய வளனாரின் பிறப்பு வளர்ப்பு வாழ்வியலை அழகுபட வார்த்து வடித்துக் கொடுத்துள்ளார் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டினர்: சமயத் தொண்டு புரிய இந்தியா வந்தவர்: கான்ஸ்டான்ஷியஸ் ஜோசப் பெஸ்கி என்பது இவரின் இயற்பெயர்,1680-1747 இவரின் வாழ்வு காலம்.

தேம்பாவணி இலக்கியம் 36 படலங்கள், 3615 பாடல்கள் கொண்டப் பெருங்காப்பியமாகும். ஏசுகிறிஸ்துவின் வாழ்க்கையோடும் மரபாக

வரும் சில கதைகளுடனும் இணைத்து ஜோசப் வரலாற்றைக் கூறுகிறது. தேம்பாவணியில் துறவறம் புகழ்ந்து கூறப்படுகிறது. சூசையப்பர் - மேரியம்மை ஆகியோரின் இல்லறம் புகழப்படுகிறது." (மு.வ. தமிழ் இலக்கிய வரலாறு)-

இறை அறத்தின் இல்லறத்தின் துறவறத்தின் மெய்யறத்தின் மாண்புகளைத் தனதாக்கி வாழ்ந்த வளனாரின் வாக்குப்பிறழா வள்ளன்மை வாழ்வியலை வீரமாமுனிவர் காப்பியம் முழுவதிலும் எதிரொலிக்கச் செய்துள்ளார். தூய வளனாரின் வாழ்வுக் காலம் அறுபது ஆண்டுகள் என்பதையும் இக் காப்பியம் வழி அறிய வருகிறோம். தேம்பாவணி தரும் இத்திறம் குறித்து அறிந்து அருள் பெறுவதோடு வளனார் பெற்ற அருள் வரங்கள் குறித்தும் அதன்வழி நாம் அடையும் ஆசீர்வாதங்கள் குறித்தும் அறிவதே இக்கட்டுரையின் மையமும் நோக்கமுமாகும்.

**எழு பிறப்பும் வெல்லும் ஏழு அருள் வரங்கள்:** (A Shield For Seven)

> **"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
> **எழுமையும் ஏமாப்பு உடைத்து"**
>
> ***(குறள் 126)***

ஒரு பிறப்பில் ஐம்பொறி ஆசைகளையும் அடக்கினால், ஏழு பிறவிக்கும் அது காவலாக அமையும்., என்றும்

> **"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
> **நெறிநின்றார் நீடுவாழ் வார்."**
>
> ***(குறள்-006)***

"Long life is theirs who tread the path of him who conquered the five senses." அதாவது, ஐம்பொறியினால் உண்டாகும் ஆசைகளை ஒழித்து கடவுளின் உண்மை நெறியில் வாழ்பவர் நிலையான வாழ்வைப் பெற்றவராவார்- என்றும் கூறுகிறது. இக்குறள் கூற்றுகள் வளனாரின் வாழ்வியலோடு நன்கு பொருந்தி போகிறது என்று சொல்லலாம்.

தூய ஆவியின் அருள் வரங்கள் ஏழும் சூசையப்பரின் வாழ்வில் வெளிப்பட்டு, உயிர்ப்பிக்கும் அருள் வரங்களாக ஒளி வீசின.




**தூய ஆவியின் வரங்கள், வளனாரில் வெளிப்பட்டு நின்ற பாங்கு**

1. Wisdom - தூய்மையாக ஒளி ரும் ஞானம்
2. Understanding மாதவத்தால் பெறப்படும் புத்தி
3. Knowledge அறக்கருணையால் விளையும் அறிவு
4. Counsel மிகை ஒளி யாம் விமரிசை
5. Fortitude வெற்றிக்கு அடித்தளமான திடம்
6. Piety நிறையருளுக்குப் பிறப்பிடமான பக்தி
7. Fear of the lord புனிதத்தின் உறைவிடமான தெய்வபயம்

**தூய்மையாக ஒளி ரும் ஞானம்:-** Incandescent Wisdom

> **"ஞானம் ஒளி மிக்கது: மங்காதது"**
>
> ***(சா.ஞா 6:12)***
>
> **"ஞானத்தின் தலையாயப் பண்பு அதன் தூய்மை"**
>
> ***(யாக்:3:17)***

தூயவரான யோசேப்பு கேடு விளைவிக்கும் காரியங்கள் குறித்தப் பயம் உள்ளவராக இருந்தார்.

**மாதவத்தால் பெறப்படும் புத்தி:-** Gift of Understanding by Penance

> **"சுடச் சுடரும் பொன்போல் ஒளி விடும் துன்பம்**
> **சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."**
>
> ***(குறள்:267)***

''As Fire Refines Gold and Makes It Glow, So Pain the Penance-Doer."

பொன்உலையிலிட்டுசோதிக்கப்படுவது போல் சோதனைகளுக்கு உட்ப்படுத்தப்பட்ட வளனார் அவரின் தவ வலிமையினால் துன்பத்தால் வருந்த வருந்த மெய்யுணர்வு பெற்றார். அதன் பயனாக தேவசத்தியங்களை நன்றாய் அறியும் புத்தியைப் பெற்றிருந்தார்.

**அறக்கருணையால் விளையும் அறிவு:** Knowledge Out-Turned by Charity

**"அறிவற்றங் காக்கும் கருவி- செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அறன்."**

***(குறள்:421)***

"Wisdom is a weapon of defense an inner fortress no foe can raze."

சோதனைகளை ஜெயித்து வெற்றிக் கண்டவர் சூசையப்பர். அழிவிலிருந்து காத்துக் கொள்ளும் ஆயுதமாம் அறிவை அறக் கருணையால் பெற்றிருந்தார். பகைவருக்குப் புலப்படாத உள்ளார்ந்த பாதுகாப்பைக் கொண்டிருந்தார்.

**மிகை ஒளி யாம் விமரிசை:-** Illumining Counsel

**"தூயவர்களுக்கோ பேரொளி இருந்தது."**

***(சா.ஞா:18:1)***

"மானிடர்களுக்கு உம் வல்லமைச் செயல்களையும் உமது அரசுக்குரிய மாட்சியின் பேரொளியையும் புலப்படுத்துவார்கள்"

*(திருப்பாடல்:145:12)*

விமரிசை எனும் ஆவியானவரின் அருள் வரம் மிகை ஒளி யாய் இவரில் வெளிப்பட்டு நின்றதால், திருக்குடும்பத்தின் மகா விமரிசையுள்ள பாதுகாவலராகவும் நல் மாதிரிகையாகவும் ஆத்தும இரட்சண்யத்திற்கு நன்மை புரிபவராகவும் விளங்கினார்.

**முழு வெற்றிக்கு அடித்தளம் திடம்**
**Fortitude Destined for Victory**

"குணநலம் சான்றோர் நலனே"-எனும் நோக்கில் பெருந்தன்மையைத் தாங்கி நிற்கும் ஐந்து தூண்கள் எவை எவை என்று வள்ளுவம் பின்வருமாறு உரைக்கிறது. "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம்-வாய்மையொடு **ஐந்துசால்பு ஊன்றியத் தூண்."**

***(குறள்:983)***

**"The pillars of excellence are five- Love, Modesty, Altruism,Compassion,Truthfulness."**

தீவினைகளின் காரணமான பசாசின் வஞ்சனை மிகுந்த சூழ்ச்சிகளால் அலைகழிக்கப் படும் மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்து விக்கினங்கள், மோசம் செய்தல்-இவைகள் குறித்த அறிவுப் பெற்று திடமாயிருந்து இறை நாமத்தினால் அனைத்தையும் வெற்றிக் கொள்ளும் ஆற்றலோடு பசாசை கூண்டோடு ஓடிப் போகச் செய்யும் வல்லமையையும் சூசை தந்தை பெற்றிருந்தார்.

**நிறையருளுக்குப் பிறப்பிடம் பக்தி:** Piety, the Promising Divine Grace

"ஈதல் இசைபட வாழ்தல" - என்பதற்கேற்ப தூய ஆவியானவரின் பக்தி எனும் அருள்வரம் வளனாரில் நிறையருளாக வெளிப்பட்டது. அவர் தம் பக்தி செயல்கள் யாவும்... இஸ்ரயேல் அரசர்களின் ஆட்சிக் குறிப்பேட்டிலும் எழுதப்பட்டுள்ளன.- *(2குறிப்பேடு: 32:32)* எனும் பழைய ஏற்பாட்டு விவிலிய வார்த்தைகளுக்குப் பொருந்தும் படியாக தருமம் செய்தல், சுறுசுறுப்பு, வேத கற்பனைகளை அனுசரித்தல் இவைகளில் பக்தியின் கூறுகள் வெளிப்பட்டு நின்றதைக் காணமுடிகிறது.

**புனிதத்தின் உறைவிடம் தெய்வபயம்:** Fear of God, the House of Sanctification

"ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே மாட்சியும் பெருமையுமாகும்: அதுவே, மகிழ்ச்சியும் அக்களிப்பின் மணிமுடியுமாகும்." *(சீரா.ஞா:1:11)*

ஆண்டவரின் பேழை வைக்கப் பட்டிருந்த இடங்கள் புனிதம் பெற்றவை- *(2 குறிப்பேடு: 8:11)* இவ் விவிலிய வரிகளும் தூய வளனாருக்குப் பொருந்துவதாகவே உள்ளது. ஆண்டவரின் பேழை- எனத் திகழ்ந்த

மரியாளை தெய்வ பயத்துடன் பாது காத்ததனால் சூசை புனிதம் மிக்கவரானார். இறைவனிடம் அவர் கொண்டிருந்த அச்சம் அவருக்கு அக்களிப்பின் மணிமுடியைப் பெற்றுத் தந்துள்ளது. அவரின் தெய்வபயம் வேத சத்தியங்களுக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்யாதிருக்கவும் ஆற்றலைத் தந்துள்ளது. மேலும், மார்ச் 19 திருநாள் குறிப்புரையில் - சான்றோர் என்று புனித வளனாருக்கு திருமறை நூல் மிக உயர்ந்த பட்டம் சூட்டுகிறது. இதன் பொருள் இறைவன் தனக்கு உகந்தவரைத் தனது புனிதத்தில் சிறந்த முறையில் பங்கேற்கச் செய்கின்றார்-என்பதை அறியச்செய்கிறது. இவ்வாறு தூய ஆவியானவரின் அருள் வரங்கள் ஏழும் உயிர்ப்பின் ஆற்றல்களாக தூய வளனாரில் வெளிப்பட்டு நின்றதைக் காணமுடிகிறது.

### தேவ வரங்களினால் நிறைந்தவர்-வளன் எனும் சூசை

“தன்னுயிர் தான் அறப் பெற்றானை- ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.”

(குறள்:268)

“All the world will worship him; whose soul is his own.”

மேற்காணும் குறள் மொழிக்கிணங்க தன்னுயிர், தான் எனும் ஆணவம் நீங்கப் பெற்றவரான தவச் சீலராம் வளனாரை தூய நிலைக்கு உயர்த்தி உலகிலுள்ள மற்ற எல்லா உயிர்களும் வணங்கும் பேற்றினை அளித்ததோடு தேவ வரங்களினால் அவரை நிரப்பி அவர் வழி மானுடம் மகிழ்வுற அவருக்கு ஆசி அளித்தார் இறைவன்.

இத்திறனை வீரமாமுனிவர் அருளிய தேம்பாவணி காப்பிய நூலில் 36-வது படலமான “முடிசூட்டுப் படலம்”- பாடல்கள் வழி நாம் அறிந்து கொள்வோம்.

### அறமுதல்வன் ஆண்டவனின் அருளாசிகள் ஏழு: SEVEN BLESSINGS FROM ABOVE

“ ....துளங்கும் ஏழ் மணிகளோ உன்னை
மேவி நின்றவர்க்கு வேண்டுவ வெறுப்ப
விரும்பி நீ அளிக்கும் ஏழ்வரங்கள்
ஏவி இன்று உனக்குத் தந்தது காட்ட
இனி இவற்று உரிமைகேள்-என்றான்.”

(தேம்பாவணி பாடல்:36:32)

தாவீதின் மரபிலே தோன்றி வளர்ந்த உம்மிடம் எவராலும் விலக்க முடியாத அரச உரிமையை ஒப்படைத்தேன்... அந்த அரச உரிமையைப் பழுதின்றிப் பாதுகாத்த வரம்பில்லா வழுவில்லாத் திறன் நோக்கி உம் சிரசின் மகுடத்தில் சுடரொளி வீசும் மாணிக்கங்களாக இவ் ஏழு வரங்களைத் தந்தேன்: இவ் ஏழு வரங்களை,சு யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்-(திருமூலர்) என்ற நிலையிலே, உம்மை நாடித்தேடி அண்டி அருகே நம்பிக்கையோடு வருவோர்க்கு வழங்கி வாழ்விப்பாயாக! என்று இறைவன் அருளியத் திறத்தினை பின்வருமாறு அறிவோம்.

THE SEVEN GRACES OF GOD ALMIGHTY

“As you are the descendant of King David, I grant to you the kingdom that you may secure its purity and glory. May the Seven Graces like the sparkling seven stars of your thrown enlighten the spirit of every individual who seek your grace and governance.”

### வேண்டுவோர்க்கு வேண்டும் பொருள் தரும் பரிசுத்த பத்தா

“களங்கம் உற்றது கண்டு இந்து தேய்த்து ஒளிரும் கழலினால் கன்னிமை துளங்கம் முற்றிய செஞ்சுடரின், உன்கற்பும் துகள் அறக் காத்தனை என்னா, உளம்கண் உற்று அழற்றும் விரகநோய் அற, கற்பு உரி நலம்தர வரம் தந்தே, விளங்க முன் பதித்த முதல்மணி தந்தேன்,வெண்கொடி ஒத்து உளத்தூயோய்!” (தேம்பாவணி பாடல்: 36:33) உள்ளத் தூய்மை மிகுந்தவரான சூசை, கேடான காரியங்கள் குறித்து பயமுள்ளவரான சூசை,கன்னி மரியாளின் களங்கமற்ற நிலையை அறிந்து காத்ததோடு தன் கற்பு நிலையிலும் வழுவாதிருந்தார். இத்தவத் தூய்மைக்குத் தக்கதாக.., உள்ளத்தை வருத்தும் விரகநோய் தீர்த்து கற்பு நெறியில் வாழ குடும்ப அமைப்பை

*ஏற்படுத்தித்தரும் வரத்தை வழங்கினார் கடவுள்.*

**A Promising Intercessor**

**Event**

The man known for the work of his hands and goodness of heart had great fear to the society he belongs to. He was well aware of the consequences of scandals. Still, as a man of deep faith and conviction, he protected Mary and Jesus, gave them shelter, and an abundant home life.

**1st Grace**

For the Goodness of Heart, St. Joseph was blessed by God Almighty and granted him the GIFT OF PURITY through which one can overcome the cardinal sin LUST.

**Prayer**

Let us pray to St. Joseph the power to live in steadfast love and conviction to have a healthy family life.

***காய்வினை விலக்கும் பாக்கியமுள்ள பிதாப்பிதா***

***"போய், வினை கொணரும் பொறிகள்***
***ஐந்து அடக்கி, பொலம்தவ வேலியைக்கோலி***
***தூய்வினை உளத்தில் துகள்புகா காத்து,***
***சுடர் விளக்கு ஆயினாய் என்னா,***
***தீய்வினை வரு முன் காக்கவும்,வந்த தீது***
***நேர்ந்து ஒழிக்கவும் உணர்த்தி***
***காய்வினை விலக்கும் வரத்தை,இவ்***
***இரண்டாங் கதிர்மணி காட்டும் மாதவனே!"***

***(தேம்பாவணி பாடல்:36:34)***

*"நெஞ்சே தவம் செய்: தவம் செய்தால் எய்துவன எல்லாம் எய்தலாம்!" (மகாகவி பாரதி) எனும் சொல்லுக்கு ஒப்ப, தவத்தின் பயனால் ஐம்புலன் வென்றவரான யோசேப்பு, உள்ளத்தில் எவ்வித மாசுமருவும் இல்லாமல் மனத்துக்கண் தூயவராய் விளங்கினார். வேதனைகளைப் புனிதமான முறையில் எதிர்கொண்டார். இதனால் தீய வினைகள் வரும் முன் காப்பதற்கான வல்லமையையும் வந்த தீமைகள் வந்த இடம் தெரியாமல் விலகி மறையவும் தாக்கும் தீமைகளைத் தாக்கி அழிக்கவும் தேவையான வல்லமையை கடவுள் இரண்டாம் வரமாக அளித்தார்.*

*இவ் இரண்டாம் வரத்தின் அருள் வளத்தால், ஆன்மீக சக்தியை அழிக்க முனையும் அகங்காரத் தீயை அவித்து அழிக்கும் ஆற்றலை தம்மவர்க்கு அருளி ஆசி வழங்குகிறார் அருள் வளனார்.*

**Insightful in Nature**

**Event**

As a man of pure heart, he encountered all his doubts and struggles more spiritually.

**2nd Grace**

God empowered him to know the struggles ahead and vanquish them from recurring. He can safeguard our soul from evil and keep us out of temptations.

**Prayer**

Let us pray to St. Joseph the knowledge to know our problems and weakness; pure heart to accept our limitations and spirit to overcome them before being enslaved by mortal spirits.

***பிரமாணிக்கம் தவறா கருணைப் பிரவாகம்***

***"பருதியே உடுத்து பனிச் சுடர் இயக்கி,***
***பரமனைப் பயந்த தாய் தன்னைக்***
***கருதியே கருத்துக் கடந்த அன்பு அருளால்***
***காத்து அரிது ஓம்பினாய் என்னா,***
***சுருதியே வடிவாய்த் தோன்றிய தாயின்***
***தொடர்பு அருள் உதவி சார்பு எய்தத்***
***தருதியே என மூன்றாம் மணி தந்தேன்,***
***தயைக்கடல் கடந்து அருள் மிக்கோய்!"***

***(தேம்பாவணி பாடல்:36:35)***

*"எல்லாம் இறைவனின் அதிமிக மகிமைக்கே"- என்ற இலட்சிய வரிகளை இலக்காக்கி செயல்படும் இயேசு சபையினருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் புனித சூசையப்பரே என்று சொல்லலாம். உலக மீட்பின் உத்தம சுடராம் பரம்பொருளைப் பக்தியோடு பாதுகாத்த தாய் மரியாளை கருத்துடனே காப்பாற்றிய அருள்நிறை மாவளனின் கருணை மிகு கடமையைப் போற்றி அறமுதல்வன் ஆண்டவன் தந்த மூன்றாம் மணிவரம் இதுவே.*

"உன்னுதவி தேடுவோர்க்கு, அருளும் ஒத்தாசையும் உறுதுணையும் கொண்ட வாழ்க்கைத் துணை வரத்தை தேர்ந்து வழங்கும் வல்லமையைப் பெற்றுக்கொள் என்பதன்படி, சூசையப்பரும் அவரிடம் வேண்டுவோர்க்கு "நல்வரன்" வரத்தை வழங்கி வாழ்விக்கிறார்.

**Steadfast Fountain of Grace**

**Event**

As a foster father of Jesus Christ the redeemer, he obliged to protect and care Jesus with supreme piety and love.

**3Rd Grace**

Delighted by his conscience, God blessed him to grant the blessings of a right partner to his petitioners on the sacrament of matrimony.

**Prayer**

Let us pray to St. Joseph to guide us to obtain the right partner in marriage and thereafter to live a steadfast life contributing mutual trust, love and care.

**பரமதேவ-இரகசியங்களின் பங்காளி**

**"கனம்பழுத்துஇரிந்த உரும்என விண்ணின்
கடிந்தபேய் கொண்ட தொல்பகையால்
மனம் பழுத்து இயற்றும் வஞ்சனை
நாண வழு இலா வென்றனை என்னா
சினம் பழுத்து எதிர்த்த குணுங்கு இனம்
ஓடி, செல்வ நின்நாம வேற்கு அஞ்ச
தனம் பழுத்து எரி நாலாம் மணி,வரமே
தந்தது ஆம் வெற்றி அம் கொடியோய்!"
(தேம்பாவணி பாடல்:36:36)**

"பரிசுத்தப் பிரசன்னத்தில் அசுத்தத்திற்கு இடமில்லை"- ஆம்! அகங்கார ஆணவத்தால் விண்ணகம் இழந்த தீமை கூட்டம் பகை கொண்டு வஞ்சனையால் உமை வீழ்த்தச சோதனைகள் பல செய்த போதும் அவைகளை மாசற்ற தூய மனத்தின் துணிவால் வெற்றிக் கொண்டவரே யோசேப்பே! இதோ நான்காம் வரம் என்று, பேய்களை விரட்டி ஓட்டும் வல்லமையை அவர் திருப்பெயருக்கு அருளினார். இதன்படி, புனித சூசையப்பரே! என்று சொன்னால் பேய்கள் விலகி ஓடி ஒழியும். ஆம்! பேய்கள் கூட்டத்தை எதிர்த்து வெற்றிக்கொடி உயர்த்தியவர் தூய வளனார்.

**Man of Fortitude**

**Event**

St. Joseph withstands the trials and temptations caused by Satan and other fallen angels who were defeated and banished to hell.

**4th Grace**

Appreciating his perseverance, God blessed him the power to cast demons and evil spirits amidst mankind.

**Prayer**

Seeking St. Joseph and his grace is more inevitable at Matrimony. With his protection, we can challenge all possible spins and turns of our life often caused by Satan and his company.

**தேவ அருள் வரப்பிரசாதங்களினால் அலங்கரிக்கப்பட்டவர்**

**"தே அருள் திளைத்த நிரப்பினால் கன்னி
சினையை உற்று ஈனினும்,ஈன்ற
மேவு அருள் மகவை மகன் என இனிதாய்
விருப்பொடு வளர்த்தனை என்னா
நோவு அருள் புதல்வர் இலாக் குறை
தீர்த் து,நுண்தகைச் சந்ததி அளிப்ப
கா அருள் கமழ் புங்கொடி நல்லோய்,
ஐந்தாம் கடி ஒளி மணிவரம் தந்தேன்!"
(தேம்பாவணி பாடல்:36:37)**

"சிறு குழந்தை இல்லா வீடும் வீடல்ல., சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறியல்ல" - (பழமொழி)

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" - (குறள்:61)**

"We know no blessing better worth our
while than intelligent children.''

ஒருவன் அடைய வேண்டியவற்றுள், அறிய வேண்டியவற்றை அறியும் நல்ல மக்களைப் பெறுவதைவிட சிறந்த செல்வம் வேறு இல்லை. மிகையொளி வீசும் ஐந்தாம் வரம் தரும் குறிப்பும் இதுவே. தூய ஆவியானவரால் கருவுற்ற கன்னியின்

மகனை கருத்தொருமித்து வளர்த்த கண்ணியமானத் தன்மையைப் பாராட்டி இறைவன் சூசைக்கு அருளியது- பிள்ளையில்லா குறை தீர்க்கவும் பிள்ளைகள் நோய்நொடி இல்லாமல் நலமாக வளரவும் வாழையடி வாழையாக சந்ததி தழைக்கவும் அருள்புரியும் ஆற்றலேயாகும்.

**Garland by the Grace and Glory of God**

**Event**

Mary was conceived by the power of the Holy Spirit. St.Joseph, accepted her in his home with unblemished love and care. He conserved the Virginity of Mary and fostered Jesus with ultimate care and concern.

**5Th Grace**

God blessed him to bless the barren with children and cure the sick children. He was given power to bless a greater generation to the prayers.

**Prayer**

St.Joseph heeds to our faith and piety. He can certainly grant our petition for a healthy baby. He blesses our descendants to have long and healthy life.

**அயரா கவனமுள்ள காவலும் பிரியாத் துணையுமானவர்**

**விருந்தினைக் கண்டார் முகத்து, அளவின்றி**
**வினைசெய மிடைந்த நோய்அருந்தி**
**திருத்தினை பொறையின் நுண்முறை எல்லாம்,**
**திருமணிக்குன்று ஒத்தாய் என்னா**
**மருந்தினைப் போன்று வருந்தினார் வருத்தம்**
**அறுத்து, உளம்குளிர்ப்ப நல்வரமே**
**அருந்தினை என, ஆறாம் மணி**
**அளித்தேன், அரும்பொறை அருள் அரசு!"**

**(தேம்பாவணி பாடல்: 36: 38)**

"மௌனம் மலையளவு சாதிக்கும்"., "பொறுத்தார் புமி ஆள்வார்." ஆம்! பேச்சு சாதிக்காத சாதனைகளை மௌனம் சாதிக்கிறது: மௌனம் என்ற ஆயுதத்தை கையில் ஏந்திக் கொண்டால், எதிர் வரும் பிரச்சனைகளைத் தூள் தூளாக்கிவிட்டு சாதனைகள் புரியலாம் -என்பதை விளக்கும் இப்பழமொழிக் கூற்று நம் சான்றோர் வளனாருக்குச் சாலப் பொருந்தும்.

பொறுமையின் சிகரமாய் விருந்து உபசரிப்புகளில் எதிர் கொண்டு வருபவரிடம் காணப்படும் மனக்குறைகளை அறிந்து முன்வந்து உதவி செய்த சூசையின் பல்லுயிர் ஓம்பும் பண்பினைப் பாராட்டி, அறக்கடவுள் அருளிய ஆறாம் வரமிது.., உம் பல்லுயிர் ஓம்பும் பண்பினால் பண் நூண் முறைகள் எல்லாம் உம் தடம் பதித்து செல்ல, குன்றின் மேல் மாணிக்க விளக்காய் ஒளிர்வீர்.., இவ்வொளி நோக்கி வருவோர் அவர் தம் வருத்தங்களினின்று விடுதலை பெறுவர்., மேலும் வருந்துவோர் உள்ளத்தின் கவலை தீர்த்து மகிழ்விக்கும் மருந்தாய் உம் பெயர் விளங்கும் எனும் பேறு பெற்றார்.

**Solicitous and A Good Company**

**Event**

St. Joseph had been welcoming, friendly and accommodating everyone without any discrimination. He had noble heart to understand their needs even before they could express and thoughtful to resolve them to their convenience.

**6th Grace**

God blessed him to be the pillar of justice to all mankind who seek his guidance. Everyone who walks to him will obtain peace of mind and joy.

**Prayer**

St. Joseph is the good counsel and praying to him in faith will certainly help us to understand our issues and pain. Our troubles and dilemmas will fade out with his grace and guidance.

**ஒளி வாயிலில் நுழைவோர்க்கு உன்னத மாதிரி**

**"தாயொடு புதல்வன் இருபுடைத்தாங்கி,**
**தகும்துயர் ஆற்று அருள் இயக்கத்**
**தீயொடு தீந்த தளிர் உடல் நீக்கி,சென்று**
**தூது உரைத்தனை என்னா,**
**நோயொடு மெலிந்த உடல் கெடும்**
**எல்வை,நொந்தவர்க்கு உதவநீ ஒளி யின்**

**வாயொடு மலர்ந்த கடைமணி வரமே**
**வகுத்தது ஆம், வான்தொழு மரபோய்!"**
**(தேம்பாவணி பாடல்:36:39)**
**"தன்னுயிர் தான்அறப் பெற்றானை-ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்."**
**(குறள்:268)**

All the world will worship him; whose soul is his own.

தவச்சீலரை உயிர்கள் எல்லாம் வணங்கும் - இவ்வாக்கு வான்தொழு மரபினரான தூய வளனாருக்கும் பொருத்தமே. வளனாரின் தளிர்த்தேகம் தளர்ச்சியுற்று தாளாத் துயர்நிலைக்கு ஆளான போது, வலப்புறம் தாய் மரியும் இடப்புறம் மகன் இயேசுவும் உமைத் தாங்கி அருள் மாரி பொழிந்தனர். சூசையும் தளிர் உடல் தகனம் ஆகும்வரை, இறைத்தூது பணியை இமைக்காமல் காத்தார். இதன் பொருட்டு அறமுதல்வன் அளித்த ஏழாம் மணிவரம் இது. துன்புறுவோர் உமைக் காணும் நேரமே அவர் தம் உடலும் உள்ளமும் நோய்நிலை நீங்கி புத்துயிர் பெறுவர்., இறப்பின் தருவாயில் இருப்போர் அமைதியில் இளைப்பாறி ஒளியின் மக்களாய் மாற்றுரு பெறுவர்.

**Exemplary to the Righteous**

**Event**

Beside Jesus and Mary, St. Joseph overcame all his trials and temptations. When felt unsteady, he stood strong and managed to fulfil his role. Until his grave he graciously carried all his duties.

**7th Grace**

God blessed him graciously that whoever seeks his petition in sickness shall be cured even before they actually pray. Praying to St. Joseph, the dying shall obtain eternal mercy and certain to enter heavenly kingdom.

**Prayer**

When we are sick and dying, let us pray and seek mercy for our sins. St. Joseph by his earnest intercessions will obtain us the healing and forgiveness from our Lord Jesus Christ and we are sure to be part of eternal happiness.

இப்படியாக, நம் அனைவருக்கும் பாதுகாவலரான மகிமைநிறை புனித வளனாரிடம் நம் வேண்டுதல்களைப் பெற்றுக் கொள்ள ஜெபிக்க வேண்டிய முறையாவது.."" அருள் நிறைந்த புனித வளனாரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. ஆடவர்க்குள் ஆசி பெற்றவரே.உம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இயேசு ஆசிப் பெற்றவரே!

புனித வளனாரே! கன்னி மரிக்கும் கடவுளின் மகன் இயேசுவுக்கும் காவலானவரே! பாவிகளாகிய எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும். ஆமென்!"

**சிறப்புக் குறிப்பு: சூசையப்பரின் மரணம்:**

"அர்ச் சூசையப்பர் மரியாயின் சரீரத்திற்கில்லாமல் ஆத்தும மணாளனாக இருந்தார்.., மாதா அவரை ஆழ்ந்து நேசித்து முப்பது ஆண்டுகள் அவருக்காக பிரமாணிக்கத்துடன் செலவிட்டார்கள். அர்ச்சூசையப்பர் அவர்களின் தந்தையாகவும் மணாளனாகவும் சகோதரராகவும் நண்பராகவும் பாதுகாவலராகவும் இருந்தார்." (காட்சியில் இயேசு கூறுவதாக மரிய வால்டோர்ட்டா-முதல் புத்தகத்தில் காண்கிறோம். -பக்:472, தமிழ் மொழிபெயர்ப்பு)

அறக்கடவுள் இறுதியாக,நீர் வளர்த்த உம் திருமகன் வழி இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு, நான் உமக்கு வழங்கிய ஆசியும் அருள்வரங்கள் ஏழும் உடல் மன வேதனை நீக்கி உரிய அறநெறியில் நிலைநிறுத்தி நித்திய வான்வீட்டை அடைந்து மகிழ வழங்கினேன் என்று கூறினார். மேலும், "நீங்கள் என் பெயரால் கேட்பதை யெல்லாம் நான் செய்வேன்." (யோவான்:14:13) என்ற இறை வாக்கிற்கு ஒப்ப "நிரை கொன்ற நசை கொள் மன்னுயிர்க்கு இரங்கி, நீ எனைக் கேட்பவை அளிப்பேன்" என்று இறைமகன் இயேசுவும் சூசைக்கு ஆசி வழங்கினார் என்று தேம்பாவணி ஆசிரியர் தம் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### புனித அவிலா தெரேசாவும்

"எந்த ஒரு வரமும் எப்பொழுதாகிலும் நான் புனித வளனாரிடம் மன்றாடிக் கேட்டு, கிடைக்காது போனதென்று என்னால் சொல்ல இயலாது"-என்றுரைத்துள்ளார்.

### தூய வளனார் வழி வாழ்வு

"அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர்" *(மத்:1:19)* "நேர்மையாக வாழ்வதை வளனாரின் வழி" என்று புனித இரண்டாம் அருள் சின்னப்பரும் மொழிந்துள்ளார். எனவே, வளனார் வழி நம் வாழ்வு நலமாக "நேர்மையை" நிதமும் நமதாக்குவோம்: வையத்துள் வாழ்வாங்கு வாழும் பாக்கியம் பெறுவோம்: வானுறையும் தெய்வத்தோடு இணைந்து மகிழ்வோம்!

~~Yes! 'Just an Obedient Silent Enthusiastic Prudent Husband, to Mary -He is JOSEPH~~

| தூய வளனாரின் சிறப்புப் பேறுகள் | அங்கீகாரம் | குறிப்பு காணக் கிடைப்பது |
|---|---|---|
| நேர்மையாளர் | திரு விவிலியம் | மத்தேயு:1:19 |
| அகில உலக கத்தோலிக்க திரு அவையின் பாதுகாவலர் | திருத்தந்தை 9-ம் பத்திநாதர் முதலாம் வத்திக்கான் சங்க முடிவில்:8 டிசம்பர் 1870 | PatrisCorde -Introduction Potentissimo Patrocinio புனித வளனாருக்கு திருச்சபை அறிவித்துள்ள பாதுகாவல்கள் |
| புனித வளனாரிடம் உலகத் தொழிலாளர்களை அர்ப்பணித்தவர். | திருத்தந்தை 15-ம் பெனடிக்ட் அவர்கள் | 1920 Bonum Sane |
| தொழிலாளர்களின் பாதுகாவலர் | திருத்தந்தை 12-ம் பத்திநாதர் அவர்கள் | 1 மே 1955- தேசியத் தொழிலாளர் தினம் |
| வல்லமை மிக்கப் பாது காவலர் | திருத்தந்தை 23-ம் அருளப்பர் அவர்கள் | 1961-இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்குவதற்கு முன் |
| வல்லமையுள்ள பரிந்துரையாளர் | புனித அவிலா தெரேசாவின் கூற்று | புனித அவிலா தெரேசாவின் வாழ்க்கை ,ஊாயிவநச-6 |
| ஆழ்நிலை ஜெப வாழ்விற்கு முன் மாதிரிகை | St.Francis De Sails Order Of Visitation. | Mannual of Practical Devotion' to St. Joseph. Page:78 |
| நன் மரணப் பாது காவலர் | 1700 ஆண்டுகளுக்கு முன்னரே புனிதர்களுக்காக எழுதப்பட்ட ஜெபத்தில் | Catechism Of Catholic Church-1014 |
| மீட்பரின் பாதுகாவலர் | புனித திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் | Remptoris Custos No; 5-7 |

| | | |
|---|---|---|
| தூய வளனார் பக்தி வெளிப்பாடு | திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் | 19 மார்ச் 2013-ல் புனித சூசையப்பர் திருநாளில் திருத்தந்தையாகப் பொறுப் பேற்றுக் கொண்டார். |
| தூய வளனார் ஆண்டு 8 டிசம்பர் 1870-8 டிசம்பர்2020 | 150 ம் ஆண்டின் நினைவாக, திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் | Patris Corde - தந்தையின் இதயத்தோடு' திருத்தூது கடி தத்தில் 8 டிசம்பர் 2020 |
| ஆடவர்க்குள் ஆசீர்வதிக்கப் பெற்றவர் | தேவமாதாவின் கணவராகவும் தூய கற்புக்கு இலக்கணமாகவும் நியமிக்கப் பட்டதன் அடையாளமாக கையிலிருந்த கோலில் லீலிமலர் துளிர்த்தது. | சத்திய வேத சித்திர விளக்கம்- மெய்விவாகம் பகுதியில்,பக்கம்:27. 4 ம் பதிப்பு:2012 பாரம்பரியமாகவும் சொல்லப்படும் செய்தி |

**விவிலிய அடிப்படையில் புனித வளனார் குறித்தக் குறிப்புகள்**

1. குடும்பங்களின் பாதுகாவலர்: லூக்கா:2:4,5
2. திருமணமான ஆண்களின் பாதுகாவலர்: மத்தேயு:2:13
3. தச்சுத் தொழில் செய்வோரின் பாதுகாவலர்: மத்:13:55.,மாற்கு:6:3
4. அகதிகள், நாடு கடத்தப் பட்டோரின் பாதுகாவலர்: மத்:2:14,21
5. தயக்கம், சந்தேகம் இவற்றை நீக்கும் மருத்துவர்: மத்:1:19,20
6. வீடு தேடுவோர்க்கு பாதுகாவலர்: லூக்கா: 2:6,7
7. வழக்குரைஞர்களின் பாதுகாவலர்: மத்:1:19
8. கருவுற்றப் பெண்கள், கருவில் சிசு இவர்களின் பாதுகாவலர்: மத்:1:20ச (புனித 2-ம் ஜான்பால் கருத்துப்படி)
9. **கல்வியாளர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கும் பாதுகாவலர்:லூக்:2:4,5**

திருத்தந்தை 23-ம் அருளப்பர் கருத்துப்படி.. "கீழ்ப்படியக் கற்றுக் கொள்வது, அமைதி காக்கக் கற்றுக் கொள்வது, பேசத் தேவைப்படும் போது குறைவாகவும் அடக்கமாகவும் பேசுவது-இவற்றைத் தான் புனித வளனார் நமக்குக் கற்றுத் தருகிறார்."

10. **நல்ல மரணத்திற்குப் பாதுகாவலர்: 2 திமோத்தேயு:2:11**

"நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம்" - ஆண்டவரும் அன்னை மரியும் அருகிருக்க அருள் நிலையில் இறந்தவர் யோசேப்பு - (கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி சுருக்கம்-பக்கம்: 64, 206 வது குறிப்பு)

11. **கனவின் யோசேப்பு: மத்தேயு:1:20.,2:13**

குறிப்புகள் தந்துதவியக் களங்கள்., நூல்கள்..

1. திருவிவிலியம்-விளக்க உரைகளுடன் (எஸ்.சூசை மாணிக்கம், முதல் பதிப்பு: 2009, கிளரீஷியன் கம்யுனிக்கேஷன், தாம்பரம், சென்னை-45)
2. தேம்பாவணி மூலமும் உரையும்: எம்.ஆர். அடைக்கலசாமி, வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை-17.
3. The 7 Graces Of God Almighty-Translation Rendered By Bro. Arul Prakash.J

4. தேம்பாவணி மொழிபெயர்ப்பு, M.Dominic Raj> Amazon Kindle E- Book Edition.2019
5. திருக்குறள் பொக்கிசம், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 21-1-2002
6. திருக்குறள்-குறிப்புரை மு.வரதராசனார், 106வது பதிப்பு,அப்பர் அச்சகம், சென்னை-108
7. புனிதர்களின் வரலாறு, 1997, ஜே.எம். நிக்கோலஸ், நாஞ்சில் பதிப்பகம்.
8. புனிதர்களின் பாதையில்., ஆர்.எஸ். அமல்ராஜ்., சே.ச, வைகறை பதிப்பகம்.
9. கடவுள் மனிதனின் காவியம்., முதல் புத்தகம்., தமிழ் மொழிபெயர்ப்பு, திருத்தந்தை 12-ம் பத்திநாதர், 26-2-1948, இத்தாலிய வால்டேர்ட்டா ஆசிரிய மையம்
10. சத்திய வேத சித்திர விளக்கம்., தமிழ் மொழியாக்கம், வந்:திபுர்சியுஸ் ரோச் ஆண்டகை சே.ச,4-ம் பதிப்பு 2012 A Society of St. Pius X Publication
11. சர்வவியாபி-வார இதழ்கள்.,புதுவை கடலூரர் உயர் மறைமாவட்டம்
12. ஞான சமுத்திரம்,10-ம் பதிப்பு, 2001, மிஷன் அச்சகம்.புதுவை.
13. தமிழர் நீதி நெறி கருவூலம், அ.சா. குருசாமி, 2004, மலர் அச்சகம், சென்னை
14. சிறந்த தமிழ்ப் பழமொழிகளும் விளக்கங்களும், கே.ஜி.எப். பழனிச்சாமி, மார்ச்-2008
15. திருமூலரின் திருமந்திரம், 9-ம் பதிப்பு - 2014, உமா அச்சகம்.
16. இயேசு காவியம், திருச்சி கலைக்காவிரி, 4-ம் பதிப்பு,1992
17. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசனார், 30-வது பதிப்பு, 2014, image digital> Chennai
18. தேம்பாவணி கீர்த்தனை., பு. ஆரோக்கிய நாயகரவர்கள், st.joseph orphanage press
19. புனிதர்களோடு வழிநடக்க.. வழிநடத்த.. அருள்தந்தை சூ.ம.செயசீலன், 2012 நல்லாயன் பதிப்பகம்.
20. பாரதியார் கவிதைகள், விகரு. இராமநாதன், 4-ம் பதிப்பு,இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை-17.
21. வஞ்சி நாட்டு வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை, எம்.எஸ்.ஜே தங்கசாமி, 1989-நாஞ்சில் பதிப்பகம்.
22. இலக்கியச் சொல்லகராதி,1985, Pioneer book services>madras.